பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆனி 30 (13—7—72) வியாழன் வெளியூர்: ஆனி 31 (14—7—72) வெள்ளி [இதழ்: 25

## இந்திரா காங்கிரசு துவக்கி வைக்கும் 'புதிய முறை'

திருச்சி, ஜூலை 13—

செய்தியாளர்:—"டில்லியிலிருந்து இந்திரா காங்கிரசு சார்பில், போராட்ட நிலையைக் கண்டறிவதற்கான மூவர் குழு தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறதே!'

முதலமைச்சர் கலைஞர்:—"அப்படி அனுப்புவது முறையானதுதான் என்று கருதப்படுமானால், அதை எல்லாக் கட்சிகளும் பின்பற்றலாம்; தி.மு. கழகமும் அந்த முறையைப் பின்பற்றக்கூடும்!"

# இந்திராவின் காலங்கடந்த விளக்கம்

## வன்முறையாளர் துணிவு பெற வாய்ப்பு அளித்தது

### பணக்காரர் களித்திட பாட்டாளி மாண்டிட வேண்டுமா?

### இந்திரா காங்கிரசுத் தலைமைக்கு முதல்வர் கலைஞர் விடுக்கும் வினு

புதுக்கோட்டை, ஜூலை 13

"இந்திரா காந்தி அவர்கள் இந்தியாவை ஆளும் மாபெரும் பொறுப்பில் இருப்பவர்; அவர்கள் ஆட்சி தமிழகத்தைத் தவிர எல்லா மாநிலங்களிலும் உள்ளது. இந்தியா ஒரே குடையின் கீழ் இருக்கிறது; அப்படிப்பட்ட கட்சியின் தலைவர் அவர்; அவரானாலும் சரி — அந்தக் கட்சியின் மாபெரும் தலைவராக இருக்கின்ற சங்கர் தயாள் சர்மா வானாலும் சரி — மின்சாரக் கட்டணம் பற்றி ஒரு செய்தியும் சொல்லவில்லை,

"திருப்பத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே நான் இந்தியத் தலைமைப் பீடத்தைக் கேட்டேன் — 'வரியைப் போடச் சொல்வதும் நீங்கள்; வருமானத்தைப் பெருக்கச் சொல்வதும் நீங்கள்; அப்படி வரி உயர்த்தினால்தான் 5வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி கிடைக்கும் என்று சொல்வதும் நீங்கள்; இத்தனைக்குப் பிறகும் மாநிலத்தில் இருக்கின்ற உங்கள் கட்சிக்காரர்கள் அந்த வரி உயர்வை எதிர்க்கின்றார்களே — இதற்கு என்ன பொருள் என்று!

"இதுவரையில் பதில் இல்லை; இன்றுதான் தலைமையமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்; இப்போது சொன்ன இந்தப் பதிலை, இம்மாதம் 2-ந் தேதி — 3-ந் தேதி அல்லது 4-ந் தேதி மாலை வானொலி மூலமாகச் சொல்லியிருந்தால், தமிழகத்தில் விவசாயக் கிளர்ச்சி நடத்தியவர்களுக்குத் தைரியம் ஏற்பட்டிருக்காது!

"'போராட்டம் நடத்தினால், கழக அரசு அந்தப் போராட்டத்தை அடக்கும்; அப்படி அடக்கினால் இந்திரா வருவார் அல்லது 'ராஜ் பவனம்' இருக்கிறது; அது இல்லாவிட்டாலும் ராஷ்டிரபதி பவனம்' இருக்கிறது; தந்திகள் அடிக்கலாம் — இராணுவம் வரும்; தமிழக அரசு கவிழும்; கவர்னர் ஆட்சி வரும்; பிறகு, ஜாம் ஜாம் என்று நாம் மாநிலத்தை ஆளலாம்; கருணாநிதியைக் கோட்டையை விட்டே விரட்டலாம்' என்று கனவு கண்டு கொண்டிருந்தார்கள் சிலர்!

"'இந்திரா காந்திக்கு இந்தக் கோரிக்கைகளில் இணக்கமா இல்லையா' என்று அப்போதே அறிவித்திருந்தால், இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்காது; ஆக, இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியது யார்?

"யாரோ சில பணக்காரர்கள் வாழ — அவர்கள் பழரசம் குடித்து மகிழ — பன்னீரில் குளித்துக் களித்திடப் பாட்டாளிகள் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்களே — இன்றையத் தினம் தலைமையமைச்சர் தெரிவித்த இக்கருத்தை அழுத்தந்திருத்தமாக இம்மாதம் 4-ந் தேதிக்கு முன்னரே அறிவித்திருந்தால், கிளர்ச்சிக்காரர்களுக்கு இந்தத் தைரியம் வந்திருக்குமா? வன்முறையாளருக்கு இந்தத் துணிவு ஏற்பட்டிருக்குமா?"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி வினவினர்.

பொதுக்கூட்டத்துக்கு திருச்சி மாவட்ட திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

திரு. வீரய்யா எம்.பி., கே.வி. சுப்பையா, அமைச்சர் மன்னை நாராயணசாமி, திருப்பத்தூர் இராமமூர்த்தி, அமைச்சர் செ. மாதவன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:—

"இப்போது விவசாயக் கிளர்ச்சி நடக்கிறது; அதில் பழைய காங்கிரசு — புதிய காங்கிரசு — வலது கம்யூனிஸ்டு — சுதந்தரா — பழைய சோஷலிஸ்டுக் கட்சி ஆகியவைதான் பங்கு கொண்டிருக்கின்றன.

மே திங்களில் போராட்டத்தைத் துவக்கினர்கள்; ஜூன் திங்களில் அதை வேகமாக முடுக்கி விட்டார்கள்; ஜூலைத் திங்களில் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்தார்கள்.

உயர்த்தப்பட்டிருக்கும் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படவேண்டும் — விவசாய வருமான வரி கூடாது — மத்திய அரசால் போடப்பட்ட பம்பு செட் வரி, உரத் தீர்வைகளைக் குறைக்க வேண்டும் — பயிர்ப் பாதுகாப்புச் செய்ய வேண்டும் — இவைகளெல்லாம் அவர்கள் வைத்த 12 கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கைகளாகும்.

இதுபற்றித் தலைமையமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், 'மின்சாரக் கட்டணத்தை எதிர்ப்பது இந்திரா காங்கிரசின் கொள்கை அல்ல; நாங்கள் அதுபற்றிக் கவலைப்படவில்லை' என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால், 'மின்சாரக் கட்டணம் உயர்ந்ததைக் குறைக்கவேண்டும்' என்று சொல்லும் அந்த 12 அம்சக் கோரிக்கைகளில் கையெழுத்திட்டவர்களில், இங்கிருக்கின்ற இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்; அந்த அளவுக்கு அவர்களிடையே கொள்கைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

'இனி வரி போடவேண்டியது வேளாண்மைத் துறையில்தான்; அந்தத் துறையில் புதிய வரிகள் போடவேண்டும்' என்று திட்டக் குழு அறிவித்திருக்கிறது; திட்டக் குழுவின் சார்பில் மத்திய அரசு, தமிழ்நாட்டுக்கு ஒரு தாக்கீதும் அனுப்பியிருக்கிறது.

அதே நேரத்தில் — இங்கிருக்கின்ற இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள், 'மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாதே' என்று போராட்டம் நடத்துகிறார்கள்.

'விவசாயக் கிளர்ச்சியில் இந்திரா காங்கிரசு ஈடுபடவே இல்லை' என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் உண்மை என்ன?

விவசாயிகள் கிளர்ச்சிக்குக் காரணமான 12 அம்சக்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா காங்கிரசு ஆட்சியாளரின் பிடிவாதத்தினால் 25 உயிர்கள் பலி

### நிலையை அறிந்துவர உ. பி. மாநிலத்துக்கு தி.மு.க. குழு செல்லும்

புதுக்கோட்டை, ஜூலை 13—

"தமிழ்நாட்டில் ஏதோ நடந்துவிட்டது என்று கருதி, இந்திரா காங்கிரசுத் தலைமை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இங்கே அனுப்ப போவதாக அறிந்தேன்.

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசு ஆட்சியில் இல்லாததால், தமிழக மக்கள் எல்லாம் இளித்தவாயர்கள் என்று நினைப்பா?

அலிகார் பல்கலைக் கழகம் உத்தரப் பிரதேசத்தில் இருக்கிறது; அங்கே ஒரு பிரச்சினை தோன்றி — அதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள்; அது மறுக்கப்பட்டதால், கிளர்ச்சி ஏற்பட்டது — துப்பாக்கிச்சூடு நடைபெற்றது — 25 பேர் செத்திருக்கிறார்கள்.

அந்தப் பிரச்சினையைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டிருந்தால் உத்தரப் பிரதேசத்தில் இத்தனை பேர் செத்திருக்கமாட்டார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

அங்குள்ள உண்மை நிலையை ஆராய முஸ்லிம் லீக் கட்சி இரண்டு எம்.பி.-க்களை அனுப்புகிறது; நமது கழகச் சார்பிலும் பிரதிநிதிகள் அனுப்ப வேண்டுமென்று அது கேட்டுக்கொண்டிருக்கிறது; தி. மு. கழகமும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது.

அதன்படி தி.மு. கழகம் உத்தரப் பிரதேசத்திற்குத் தனது எம்.பி.-க்கள் மூவரை அனுப்பும் — அவர்களது பெயர்களைப் பொதுச்செயலாளர் முறைப்படி அறிவிப்பார்.

அவர்கள், தூதுக் குழுவாக அல்ல — கட்சிகளின் சார்பில் நிலைமையை அறியச் செல்வார்கள்."

—கழகத் தலைவர் கலைஞர்

(புதுக்கோட்டைக் கூட்டத்தில்)

## கேரளத்தில் மின்சாரக் கட்டண எதிர்ப்புக் கிளர்ச்சி துவங்குமா?

### தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசு — வலது கம்யூனிஸ்டுகளின் பதில் என்ன?

### 9 காசாக இருந்த மின்சாரக் கட்டணத்தை 12 காசாக உயர்த்துகிறது கேரள அரசு

திருவனந்தபுரம், ஜூலை 13—

விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 9 காசிலிருந்து 12 காசாக உயர்த்துவதென்று கேரள அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன்மூலம் ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 20 இலட்சம் அதிகப்படியாக வருமானம் கிடைக்குமென்று அம்மாநில அரசு எதிர்பார்க்கிறது.

கேரள அரசு ரூ. 2 கோடி அளவில் வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது; இதற்கு அது, தனது பங்காக ரூ. 1,04,00,000 திரட்ட வேண்டியிருக்கிறது; மீதியை மத்திய அரசு கொடுக்கும்.

மேற்கண்ட தொகையைத் திரட்டுவதற்காகவே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

மற்றும் தேவைப்படும் தொகைக்கு வேறுபல நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு எண்ணியிருக்கிறது.

# சூலை 15: வன்முறை கண்டனப் பொதுக்கூட்டங்கள்

—[★]—

## கலந்துகொள்ளும் தலைவர்கள் --- பேச்சாளர்கள் பட்டியல்

சென்னையில் 8—7—72 அன்று நடைபெற்ற சழகத் தோழமைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கிணங்கவும், சழகத் தலைவர் கலைஞர் அவர்களின் அறிக்கைக்கிணங்கவும் 15-7-72 அன்று நாடெங்கும் நடைபெறவிருக்கும் 'வன்முறைக் கண்டன'ப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் -- கழக முன்னணித் தோழர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள் பற்றிய விவரம் (திருத்தப்பட்டபடி) இங்கு தரப்படுகிறது :—

**சென்னை**
முதலமைச்சர் கலைஞர்
சிலம்புச்செல்வர் ம. பொ. சி.
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.
பி. கே. மூக்கையாதேவர் எம்.பி.
கடலூர் கி. வீரமணி
எஸ். எஸ். இராமசாமி படையாச்சி எம்.எல்.சி.
நீலநாராயணன் எம்.எல்.சி.

**திருச்சி**
அமைச்சர் நாவலர்
அப்துல் வகாப் எம்.எல்.சி.
செல்வேந்திரன்
ஜி. பராங்குசம் எம்.எல்.சி.
எம். எஸ். வெங்கடாசலம்
வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
எஸ். ஏ. ஜி. ராபி

**நெய்வேலி, கடலூர்**
அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்
ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி.
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
பாபு கோவிந்தராசு எம்.எல்.ஏ.
துரை கதிரேசன்
ஆண்டகுருநாதன்

**கோவை--சிங்காநல்லூர்**
அமைச்சர் என். வி. நடராசன்
எம். எம். பீர் முகம்மது
எஸ். ஏ. இராசமாணிக்கம்
தோழர் கஸ்தூரி எம்.எல்.சி.
ப. கோபால் எம்.எல்.ஏ.
கி. அரங்கநாதன் எம்.எல்.ஏ.
தி. கு. மெய்யப்பன்

**ஈரோடு, மொடக்குறிச்சி**
அமைச்சர் ம. உ. சண்முகம்
மு. சின்னசாமி எம்.எல்.ஏ.
பி. எஸ். விசுவநாதன்
எம். சுப்பிரமணியன் எம்.எல்.ஏ.

**தஞ்சை**
அமைச்சர் சத்தியவாணிமுத்து
எம். எம். மக்கர் எம்.எல்.சி.
குப்புசாமி
ஜார்ஜ் கோமகன் எம்.எல்.சி.
எஸ். நடராசன் எம்.எல்.ஏ.

**மதுரை**
அமைச்சர் செ. மாதவன்
மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.
வி. எம். யூசுப் சாகிப்
ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ.
நீர்காத்தலிங்கம்

**தென்காசி**
அமைச்சர் சாதிக் பாட்சா
திருச்சி எம். எஸ். மணி
கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ.

**மன்னார்குடி**
அமைச்சர் ப. நாராயணசாமி
எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி.
கு. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ.
சு. நாராயணசாமி

**திண்டிவனம்**
அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
ஜி. இராசாராம் எம்.எல்.ஏ.
டி. சே. குமாரசாமி

**உடுமலை -- பொள்ளாச்சி**
அமைச்சர் க. இராசாராம்
ஏ. பி. சண்முகசுந்தரம்
ஏ. எஸ். மணி எம்.எல்.ஏ.

**நாகர்கோவில்**
அமைச்சர் மு. கண்ணப்பன்
எஸ். முகம்மதுகான்
எம். சி. பாலன் எம்.பி.
இராசாப்பிள்ளை எம்.எல்.ஏ.
ஏ. திரவியம்

**நாமக்கல்**
அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்
மு. பழனிவேலன் எம்.எல்.ஏ.

**சேலம்**
நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி.
ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி.
ஏ. அமனுல்லாகான்
ஏ. ஜெயராமன் எம்.எல்.ஏ.

**திருப்பூர் -- அவினாசி**
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
கோ. சி. மணி எம்.எல்.சி.
சு. துரைசாமி எம்.எல்.ஏ.

**காஞ்சிபுரம்**
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
முரசொலி மாறன் எம்.பி.
சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.
திருத்தணி தியாகராசன்
கே. டி. எஸ். மணி எம்.எல்.ஏ.

**பட்டுக்கோட்டை**
மா. முத்துசாமி எம்.பி
டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி.
செல்வி தமிழரசி
சக்தி கதிர்வேலு

**திருவொற்றியூர்**
காட்டூர் கோபால் எம்.எல்.சி.
ஜி. இளங்கோவன் எம்.எல்.ஏ.
மதுரை எஸ். காமராஜ்
கே. சுப்பிரமணி
டி. நடராசன் எம்.சி.
இரா. மு. மனோகரன் எம்.சி.
பழனிசாமி எம்.சி.
வை. பார்த்தசாரதி எம்.சி.
எஸ். ஐ. வெங்கட்ராமன்

**கும்பகோணம்**
க. அறிவழகன் எம்.எல்.சி.
கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.
சு. பத்மநாபன்
எஸ். ஆர். இராதா

**சிவகங்கை**
அறிவுடைநம்பி எம்.எல்.சி.
சக்தி மோகன் எம்.எல்.சி.
சேதுராமன் எம்.எல்.ஏ.
பெரியகுளம் அப்துல் ரகிமான்

**திருவாரூர்**
மா. முத்துசாமி எம்.பி.
கே. விநாயகம்
தாழை மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
கருணை மு. ஜமால்

**நெல்லை**
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
டி. எம். பீர் முகம்மது
பொ. பத்மனாபன் எம்.எல்.ஏ.
கே. பி. கந்தசாமி எம்.எல்.ஏ.
அழகியநம்பி
தியாக அரசன்

**மதுராந்தகம்**
டி. கே. சீனிவாசன் எம்.பி.
என். வி. என். சோமு (சென்னை நகர துணை மேயர்)
கே. நீலமேகம்
வெங்கா எம்.எல்.சி.
சி. ஆறுமுகம் எம்.எல்.ஏ.

**அம்பத்தூர்**
காட்டூர் கோபால் எம்.எல்.சி.
வி. எஸ். கோவிந்தராசன்

**அருப்புக்கோட்டை**
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
திருப்பத்தூர் இராமமூர்த்தி

**திண்டுக்கல்**
சி. டி. தண்டபாணி எம்.பி.
பொன். சீனிவாசன்
மா. தங்கவேலர்

**பழனி**
மு இராமநாதன் எம்.எல்.சி.
பி. எஸ். மணியன் எம்.எல்.ஏ.
சி. பழனிசாமி எம்.எல்.ஏ.

**மேட்டுப்பாளையம்**
நன்னிலம் நடராசன்
எம். சி. தூயமணி எம்.எல்.ஏ.
இரசாக்

**தாராபுரம்**
திருமதி பழனியம்மாள் எம்.எல்.ஏ.
பி. ஆர். இலட்சுமிகாந்தன்

**மணப்பாறை**
எம். கந்தசாமி எம்.எல்.ஏ.
வெங்குசாமி, ஆண்டியப்பன்

**பவானி -- பெருந்துறை**
சி. சிட்டிபாபு எம்.பி.
பி. ஏ. சாமிநாதன் எம்.பி.
சுட்டையன், க. அன்பரசு,
வி. வி. இராமு

**நாகை**
அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ.
கோவை செழியன் எம்.எல்.ஏ.
ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.

**செங்கற்பட்டு**
ம. வே. நாராயணசாமி எம்.எல்.ஏ.
ஜே. எம். மியாகான்
செ. கோ. விசுவநாதன்
வ. பசுபதி எம்.எல்.ஏ.
செ. அ. பலராமன்

**கோபி -- சத்தியமங்கலம்**
ஜி. விசுவநாதன் எம்.பி.
ஆர். பி. உலகநம்பி எம்.பி.
எஸ். கே. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
டாக்டர் பழனியப்பன்
இராமராசு எம்.எல்.ஏ.
எஸ். ஜி. சண்ணப்பன்

**விழுப்புரம்**
எம். எஸ். அப்துல் காதர் எம்.பி.
எம். சண்முகம் எம்.எல்.ஏ.
சா. கணேசன் (முன்னாள் மேயர்)
சோ. கி. மூர்த்தி எம்.சி.
பக்தவத்சலு

**தூத்துக்குடி**
எம். எஸ். சிவசாமி எம்.பி.
ஆலடி அருணா எம்.எல்.ஏ.
கே. ஆர். இராமலிங்கம்
இரா. கிருஷ்ணன் எம்.எல்.ஏ.

**பு. புளியம்பட்டி**
கோபி ஜி. என். இராசு எம்.எல்.சி.
ஜி. பி. வெங்கிடு எம்.சி.

**அரிமழம்**
மு இடலரசன்
லெ. முத்துவீரப்பன்
எம். எஸ். அப்துல் மஜீத்
சிங்கமுத்து, பா. செழியன்

**குடியேற்றம்**
துரை முருகன் எம்.எல்.ஏ.
அப்துல் வகாப் எம்.எல்.ஏ.
ஏ. கே. துரைசாமி எம்.எல்.ஏ.
காட்பாடி முனுசாமி

**விருதுநகர்**
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
பி. சீனிவாசன் எம்.எல்.ஏ.
வ. பெ. வடிவேல்

**கம்பம்**
நெல்லை ஏ. எல். சுப்பிரமணியம்
சொ. காவேரிமணியம் எம்.எல்.ஏ.
எம். இராசாங்கம் எம்.பி.
எஸ். அக்கினிராசு

**இடைப்பாடி**
நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
ஆறுமுகம் எம்.எல்.ஏ.
ந. நடேசன், பா. பண்டரிநாதன்
ஆர். வி. பெருமாள்
சேட்டு டி. முத்து

**ஆலந்தூர்**
டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி.
மேயர் காமாட்சி ஜெயராமன்
பி. சிவசங்கரன்
ஆர். மோகனரங்கம்
மு. மாசிலாமணி எம்.எல்.சி.
டி. எஸ். இலட்சுமணன் எம்.பி.
சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி.

**அரக்கோணம்**
வி. முனுசாமி எம்.சி.
மைனர் மோசஸ் எம்.சி.
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
என். எஸ். பலராமன் எம்.எல்.ஏ.

**ஆரணி**
ஏ. கே. வில்வம்
தா. வீ. அன்புக்கண்ணன்
ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ.
டி. எத்திராசு, செல்வரசு

**இராணிப்பேட்டை**
கோடம்பாக்கம் குமார்
அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ.
வேலம் தம்பிதாசன்
பி. சி. சுப்பிரமணியம்
ஆர். எம். எஸ். இராசன்

**ஆலங்குடி**
கே. வி. சுப்பையா
அ. பெரியண்ணன்
வெ. மணிமொழி
வெ. மு குமார்

**திருத்தணி**
திருமதி அலமேலு அப்பாதுரை எம்.சி.
செல்விசற்குணம் எம்.சி.
ஏ. பரந்தாமன் எம்.எல்.ஏ.
கோவிந்தசாமி
எம். கே. ஆறுமுகம்

**கிருஷ்ணகிரி**
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
எம். ஏ. சாலிசா சாகிப்
எச். எல். முருகேசன்
எம். கமலநாதன் எம்.பி.
சி. மன்னியப்பன் எம்.எல்.ஏ.
எம். வி. கரிவேங்கடம் எம்.எல்.ஏ.
ஆர். சின்னசாமி எம்.எல்.ஏ.
வி. சி. கோவிந்தசாமி

**புள்ளம்பாடி**
முத்தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ.
அருணாசலம்

**காங்கேயம் -- வெள்ளக்கோவில்**
கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி.
ஏ. எம். இராசா எம்.எல்.ஏ.
ஏ. என். சாமி

**பண்ருட்டி**
ந. வீராசாமி எம்.எல்.ஏ.
ஏ. வி. தண்டபாணி, ஏ. மணி
ஆர். தண்டபாணி, குப்புசாமி

**திருப்பத்தூர் (முகவை)**
தா. கிருஷ்ணன் எம்.பி.
கடையநல்லூர் திராவிடமணி

**குளித்தலை**
இளமுருகு பொற்செல்வி
பெ. சவுந்திரபாண்டியன்
கு. வி. முத்தசாமி எம்.எல்.ஏ.
அ. பெ. கிருஷ்ணன்
கே. வி சிவராஜ்

**கீரனூர்**
ஆர். நாகசுந்தரம், க. தங்கராசு
ஆ. தமிழ்ச்செல்வன்
கே. எம். பெரியசாமி

**முசிறி**
குளித்தலை முத்துகிருஷ்ணன் எம்.எல்.சி
எஸ் கே. வடிவேலு எம்.எல்.ஏ.
பி. எஸ் முத்துச்செல்வன்
எம். பி. நடராசன் எம்.எல்.ஏ.
காத்தலிங்கம்

**திருவெறும்பூர்**
கு. காமாட்சி எம்.எல்.ஏ.
கே. எஸ். முருகேசன்
மு. நடராசன்

**திருமயம்**
கே. வீரையா எம்.பி.
நல்லமணியன், சர்பதீன்

**பொன்னமராவதி**
அ. தியாகராசன் காடுவெட்டி
முத்து சலிங்கன்
மெ. சொக்கலிங்கம்

**வேலாயுதம்பாளையம்**
எஸ். நல்லுசாமி எம்.எல்.ஏ.
என். கே. காந்தி

**அரவக்குறிச்சி**
அப்துல் ஜப்பார் எம்.எல்.ஏ.
மல்லையன், பரமத்தி சண்முகம்

**லால்குடி**
மு. க. த. நடராசன் எம்.எல்.ஏ.
பரமசிவம், இரா. கோபால்

**அரியலூர்**
கோ. சிவப்பெருமாள் எம்.எல்.ஏ.
எஸ் இராமசாமி
சின்னச்சாமி எம்.எல்.ஏ.

**ஆண்டிமடம்**
சதாசிவம் எம்.எல்.ஏ.
கா. சோ. கணேசன்
சிவ. சுப்பிரமணியன்
கே. என். இராமச்சந்திரன்
ஏ. கே. மூர்த்தி

**பெரம்பலூர்**
ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ.
மழனிவேலன் எம்.எல்.ஏ.
பாடாலூர் சோமசுந்தரம்

**துறையூர்**
து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ.
ஆ. துரைராசு எம்.பி.
அ. சித்தி

**விராலிமலை**
வி. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ.
அ. பெ. இராசு
ரகிமதுல்லா

---

## ரிசர்வ் வங்கியில் அதிகப் பற்று

### ஒரே மாதத்தில் உயர்ந்தது எப்படி?

புதுடில்லி, சூலை 12— ரிசர்வ் வங்கியிடம் மாநில அரசுகளின் அதிகப் பற்று (ஓவர் டிராப்ட்) இவ்வாண்டு ஏப்ரல் முதல் நாளன்று ரூ 462 கோடியாக இருந்தது; ஆனால் ஏப்ரல் 29-ஆம் நாளன்று அது ரூ 640 கோடியாக உயர்ந்துவிட்டது.

மே திங்கள் முதல் நாளிலிருந்து மாநில அரசுகட்கு ஒப்புதல் பெறாத அதிகப் பற்றுக்களை அனுமதிப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; அந்த நாளுக்குள் அதிகப் பற்றுக்களை உயர்த்த மாநில அரசுகள் முற்பட்டதால்தான், ஏப்ரல் 29-ம் நாளன்று மொத்த அதிகப் பற்றுத் தொகையின் அளவு ரூ. 640 கோடியாக உயர்ந்தது என்று கருதப்படுகிறது.

ஓர் உயர்மட்டக் குழு இப்பிரச்சினை பற்றி ஆய்ந்து; 'தொடக்கத்தில் அதிகப் பற்றுத் தொகையில் 15 சதவிகிதத்தை மாநில அரசுகள் 1972—73-ல் திருப்பிச் செலுத்திவிட வேண்டும்' என்று அக்குழு யோசனை தெரிவித்தது; அவ்வாறு செய்ய மாநில அரசுகள் ஒப்புக்கொண்டன.

காஷ்மீர், இராசஸ்தான், ஒரிசா, மைசூர், ஆந்திரம், அசாம், கேரளம், மேகாலயா ஆகிய எட்டு மாநிலங்களுக்குத் திட்டச் சார்பில்லா இனங்களின் செலவுகள் சம்பந்தமாகப் பற்றுக்குறையைச் சமாளிக்க மத்திய அரசு சிறப்பு உதவித் தொகையாக ரூ. 142 கோடி கொடுத்திருந்தும், ரிசர்வ் வங்கியிடம் மாநிலங்கள் அதிகப் பற்று வைக்கும் பிரச்சினை சீரடையவில்லை.

நிதித் துறையில் தொடர்ந்து பற்றுக்குறை நிலையில் உள்ள இந்த மாநிலங்கட்குச் சிறப்பு உதவி தருவதற்காக 1972—73ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 130 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களில் திட்டச் சார்பில்லா இனங்களின் செலவுகள் வளர்ந்துகொண்டே போகின்றன; மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப் படி அவ்வப்போது உயர்த்தப்படுகிறது; இந்த இரண்டு காரணங்களாலேயே மாநில அரசுகளின் அதிகப் பற்று பெருகுகிறது.

---

## விருத்தாசலத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம்

விருத்தாசலம், கள்ளக்குறிச்சி தாலுகாக்கள், பண்ணுருட்டி துணைத் தாலுகா பகுதி மக்களுக்கு இலவசக் கண் சிகிச்சை செய்யவும் -- மூக்குக் கண்ணாடிகள் கொடுக்கவும் அரசு ஒரு முகாம் நடத்த முடிவு செய்துள்ளது.

இம்முகாம், 19-ம் நாள் துவங்கி 31-ம் நாள்வரை விருத்தாசலத்தில் கொளஞ்சியப்பர் தேவஸ்தானம் இதற்கென அமைத்துள்ள இடத்தில் நடைபெறும்; இதில் 3,000 பேர் பயன்பெறுவர்.

---

# வங்கிகள் -- மேல்தட்டில் உள்ளவர்க்கு மட்டுமல்ல!

## ஏழை எளிய மக்களுக்குப் பயன்பட வேண்டும்

### அரசுடைமையான வங்கிகளின் இன்றைய நிலை-- முதலமைச்சர் கலைஞர் வேதனை

சென்னை சூலை 12

"வங்கிகள் தேசியமயமாக்கப்படுவதைப் பிற்போக்குச் சக்திகளெல்லாம் எதிர்த்தன; 'வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டால், ஏழைகள் -- சிறு கடைக்காரர்கள் -- காய்கறி விற்போர் -- கை வண்டிக்காரர்கள் -- ரிக்ஷா இழுப்போர் -- சாதாரண ஏழை எளிய மக்களுக்கெல்லாம் கடன் தரப் போகிறார்களா? ஆகவே, வங்கிகள் தேசியமயமாக்கப்படுவதை ஏற்க முடியாது' என்றார்கள் -- கேலி பேசினார்கள்!

"பிற்போக்குச் சக்திகளின் அந்த எதிர்ப்புக் கணைகளையெல்லாம் தடுத்து நிறுத்தினோம். அப்படி தேசியமயமாக்கப்பட்ட அந்த வங்கிகளின் நடவடிக்கைகள் இன்று நாம் வேதனைப்படத்தக்க அளவில் இருக்கின்றன; தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முழு அளவில் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படவில்லை.

"கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கையும் அப்படி இருக்கக் கூடாது; இப்படிப்பட்ட கூட்டுறவு வங்கிகள்தான் சமுதாயத்தின் அடித்தட்டிலே இருப்பவர்களுக்கு -- அடித்தளத்திலே இருப்பவர்களுக்கு -- ஏழை எளியவர்களுக்கு -- விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் இயங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், விழா ஒன்றில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

ஜார்ஜ் வுன் கூட்டுறவு வங்கி இணைப்புக் கட்டிடத் திறப்பு விழா, சூலை 8-ஆம் நாள் நடைபெற்றது.

கூட்டுறவு வங்கித் தலைவர் பி. நடேசன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி பா. ஆதித்தனார் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில், வங்கி நடைமுறை விவரங்களடங்கிய விழா மலரை, சட்ட அமைச்சர் செ. மாதவன் வெளியிட்டார்.

பாதுகாப்புப் பெட்டகத் திட்டத்தை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் துவக்கி வைத்தார்.

1923-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு—136 பாதுகாப்புப் பெட்டகங்கள் அமையப்பெற்ற கூட்டுறவு வங்கியின் இணைப்புக் கட்டடத்தைத் திறந்துவைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது :—

"ஒரு காலத்தில் வங்கி என்றால், 'அந்தஸ்து படைத்தவர்களும் -- சமுதாயத்தின் உயர்ந்த மட்டத்திலே இருப்பவர்களும்தான் தொடர்பு கொள்ளலாம்' என்றொரு நிலை இருந்தது.

சாதாரண ஏழை எளிய மக்களும் — தொழிலாளர்களும் — விவசாயிகளும் வங்கிகள் மூலம் பலன் பெற வேண்டுமென்ற கழக அரசின் கொள்கையை உணர்ந்து, இப்படிப்பட்ட வங்கிகள் செயல்படுவது அறிந்து நான் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், 'வங்கிகள் ஏழைக்கும் பயன்பட வேண்டும்' என்ற நல்ல நோக்கத்திலேதான், 'வங்கிகள் தேசிய மயமாக்கப்படவேண்டும்' என்ற கருத்தைப் பல்லாண்டு காலமாய் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக -- தளபதியாக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த அந்தக் காலத்திலேயே வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி வந்தார்கள்; 'வங்கிகள் தேசியமயமாக்கப்படவேண்டும்' என்ற அந்த நல்ல நோக்கம் கழக மாநாடுகளில் தீர்மானமாகவும் நிறைவேறியிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னால் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு 1969-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் நான் கலந்துகொண்டேன்; தலைமை அமைச்சர் இந்திரா தலைமையில் அப்போதைய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயும் கலந்துகொண்ட அந்த மாநாட்டில், 'வங்கிகள் தேசியமயமாக்கப்படவேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தினேன்; அந்தக் கருத்தை டில்லியில் உள்ள ஏடுகளெல்லாம்கூட ஆதரித்து எழுதின.

இரண்டாவது நாள் நடந்த கூட்டத்தில், 'வங்கிகள் தேசியமயமாக்கப்படவேண்டும் என்று நான் தெரிவித்த கருத்தை ஆதரித்து ஜோதிபாசு பேசினார்; நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய், 'அது நடக்காத காரியம் -- அது சரிப்படாது' என்று கருத்தறிவித்தார்; அருகிலிருந்த இந்திரா காந்தி அம்மையாரும் அப்போது அதை ஆமோதித்தார்.

"ஏழை எளிய மக்களும் பயனடையும் விதத்தில் வங்கிகள் தேசியமயமாக்கப்படவேண்டும்" என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து வெற்றி பெற்றது; வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன; ஆனால், அந்த வங்கிகள் தமிழ்நாட்டிற்கு முக்கியத்வம் தரவேண்டுமென்று நாங்கள் கூறிய அந்த நோக்கம் முழு அளவில் ஈடேற்றப்படவில்லை."

---

# இராசபாளையத்தில் குண்டர் வெறியாட்டம்

## மணி -- சாமி வீடு -- கடைகளைத் தாக்கிக் கொள்ளையடித்தனர்

### 'அர்த்தால்' என்ற பெயரில் நடத்திய 'ரௌடித்தனம்'

இராசபாளையத்தில் 5—7—72 அன்று 'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரில் இந்திரா காங்கிரசு —சிண்டிகேட் காங்கிரசு—வலது சாரிக் கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளில் உள்ள காலிகளும், ரௌடிகளும் சுமார் ஆயிரம்பேர் கையில் பயங்கரமான ஆயுதங்களுடன் மணி—சாமி கலைக் குழுவைச் சேர்ந்த மணியின் சைக்கிள் கடையையும், சாமியின் வீட்டையும் திட்டமிட்டுத் தாக்கினர்.

முதலில் சாமியின் வீட்டிற்குச் சென்று கடப்பாரை போன்ற ஆயுதங்களால் கதவுகளை உடைத்தனர்; வாயிலில் இருந்த 'அண்ணா இல்லம்' என்ற வளைவை இடித்தனர்; பின்பு வீட்டிற்குள் புகுந்து கழகத் தலைவர்களின் படங்களையும், கதவுகள் -- சன்னல்கள் -- கண்ணாடிகள் -- கட்டில்கள் முதலியவற்றை நொறுக்கினர்; பின்பு அலமாரியை உடைத்து உள்ளே இருந்த ரொக்கம் ரூ. 300-ஐயும், பாத்திரங்களையும் எடுத்துச் சென்றுவிட்டனர்; துணிமணிகள் அனைத்தையும் நெருப்பிலிட்டுக் கொளுத்தினர்; சேதத்தின் மதிப்பு ரூ. 10,000 இருக்கும்.

பின்பு அந்தக் காலிகளும் -- ரௌடிகளும் மணியின் சைக்கிள் கடைக்குச் சென்று பூட்டியிருந்த கடையை உடைத்து—உள்ளே டைம்பீஸ் கெடிகாரம், பெட்ரோமாக்ஸ் விளக்கு, சைக்கிள் உறுப்புக்கள் -- டூல்ஸ் முதலியவற்றையும், அண்ணா பிறந்த நாள் விழா விற்காகப் பொதுமக்களால் சேர்க்கப்பட்ட உண்டியலையும் கொள்ளையடித்தனர்; அங்கிருந்த கழகத் தலைவர்களின் போட்டோ படங்களை நொறுக்கினர்; பின்பு கூரையில் பெட்ரோலை ஊற்றித் தீயிட்டனர்.

கடைக்கு உள்ளே இருந்த 6 சைக்கிள்களும், புதிய டயர் -- டியூப்களும், மற்ற பொருள்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இக்கடையின் சேத மதிப்பு ரூ 2,000-த்திற்கும் அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில், மணி—சாமி இருவரையும் தாக்குவதற்காக அவர்களைத் தேடியிருக்கின்றனர்.

தங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இருப்பதை தோழர்கள் மணியும் -- சாமியும் தெரிவித்துள்ளனர்.

---

வேளாண்மைத் துறை அமைச்சர்

## மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

சூலை 14 முற்பகல் 11 மணி: ஆலங்குடி—திருமணம்; நண்பகல் 12 மணி: பெருங்குடி ஊராட்சி மன்றத்தில் மின்விளக்கு ஏற்றல்; பிற்பகல் 1 மணி: கோரையார் தலைப்பு; மாலை 4 மணி: தென் குவளவேலி ஊராட்சி மன்ற மின் விளக்கேற்றல்; 6 மணி: பாபநாசம்—தஞ்சை மாவட்ட ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கக் கார் வழங்கு விழா; இரவு 8 மணி: பொதுக்கூட்டம்.

சூலை 15: மன்னார்குடி—பொதுக்கூட்டம்.

---

## சி. பி. கனகசபை

நிகழ்ச்சிகள்

சூலை 14 காலை: மாயவரம்; மாலை: திருநள்ளாறு; 15: பெண்ணாடம்; 16: சேலம்; 18: தா. சோ. பேட்டை; 19: கொள்ளிடம்; 20: பாபநாசம்.

---

## வங்க தேசத்துக்குச் செல்லப் பாஸ்போர்ட்

இந்தியாவுக்கும் -- வங்க தேசத்துக்குமிடையே மக்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நடப்பு ஆண்டு செப்டம்பர் துவக்கத்திலிருந்து 'பாஸ்போர்ட்' ஏற்பாடு செயலுக்கு வரும்; தற்போதுள்ள பெர்மிட் முறைக்கும் பதில் 'பாஸ்போர்ட்' ஏற்பாடு செயலாக்கப்படும்.

அனுமதியின்றி மக்கள் போக்குவரத்தைத் தடுக்கவும், கள்ளக் கடத்தல் -- இரு நாடுகளின் நக்சல் பாரிகளிடை தொடர்பு போன்ற சமூக விரோத நடவடிக்கைகளை ஒடுக்கவும் வேண்டி பாஸ்போர்ட் ஏற்பாட்டைச் செயல்படுத்த வங்க தேச அரசு கோரியது; இதனை இந்திய அரசு உடனடியாக ஒப்புக் கொண்டது.

பெர்மிட் ஏற்பாடு ஆகஸ்டு இறுதியில் ரத்து செய்யப்படும்.

---

## என். கிட்டப்பா இல்லத் திருமணம்

மாயூரம் என். கிட்டப்பா அவர்களின் சகோதரி மகள் செல்வி திலகவதிக்கும்—தோழர் அ. செங்குட்டுவனுக்கும், 14—7—72 காலை 9 மணிக்கு, அழகப்பா திரையரங்கில், நாவலர் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அமைச்சர்கள் மன்னை நாராயணசாமி, எஸ், இராமச்சந்திரன், நாஞ்சில் கி, மனோகரன் எம்.பி., மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

---

# நகராட்சி இடைத்தேர்தல் -- கழகம் பெற்ற வெற்றி

## இந்திரா கட்சிக்குப் படுதோல்வி

சென்னை, சூலை 11—

தமிழ்நாட்டில் நடைபெற்ற நகராட்சிமன்ற இடைத் தேர்தல்களில் கழகத்திற்கே பெருவாரியான இடங்கள் கிடைத்திருக்கின்றன.

தேர்தல் நடைபெற்ற 13 இடங்களில் 7 இடங்களைக் கழகம் கைப்பற்றியுள்ளது; தோழமைக் கட்சியான முஸ்லீம் லீக் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளது; சிண்டிகேட் கட்சிக்கு மூன்றே இடங்கள்தான் கிடைத்தன. இந்திரா கட்சிக்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை.

வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு :—

ஆரணி 2வது வார்டு:—காசிநாதன் (தி.மு.க.)

கிருஷ்ணகிரி 10-வது வார்டு:—சின்னசாமி (தி.மு.க.)

புதுக்கோட்டை 7-வது வார்டு:—வீரய்யா (தி.மு.க.)

இராமநாதபுரம் 9-வது வார்டு:—வி. எஸ். நடராசன் (தி.மு.க.)

திருநெல்வேலி 9-வது வார்டு:—தனக்கோடி (தி.மு.க.)

தேவகோட்டை 4-வது வார்டு:—கணேசன் (தி.மு.க.)

நெல்லிக்குப்பம் 12-வது வார்டு:—அப்துல் ஜலீல் (கழக ஆதரவு சுயேச்சை)

புளியங்குடி 12-வது வார்டு:—செல்வன் பிச்சையா (கழக ஆதரவு சுயேச்சை)

21-வது வார்டு:— அண்ணாமலை (போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக ஆதரவு சுயேச்சை)

குடியாத்தம் வார்டு:—அன்வர் (லீக் ஆதரவு சுயேச்சை)

பரமக்குடி 12-வது வார்டு:—உசேன் (லீக்)

நாகர்கோயில் :—2 வார்டுகளில் சிண்டிகேட் வெற்றி.

காரைக்குடி :—ஒரு வார்டில் சிண்டிகேட் வெற்றி.

---

# ஊதியங்களைச் சீரமைக்க நடவடிக்கை

## நாடு முழுவதிலும் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கத் தனி அமைப்பு

### மத்திய தொழிலாளர் அமைச்சர் ஆர். கே. காடில்கர் யோசனை

பூனா சூலை 13—

"நாட்டில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் ஊதிய அமைப்பை அறிவுபூர்வமான முறையில் சீரமைக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தாகவேண்டியது அவசியமாகும் என்ற கருத்தை நான் பலமாக ஆதரிக்கிறேன்"

என்று மத்திய தொழிலாளர் அமைச்சர் ஆர். கே. காடில்கர் பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"கிராமப்புறங்களிலும் -- வேளாண்மைத் துறையிலும் இந்த நோக்கம் கைகூடச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் துறையில் தற்போது காணப்படும் ஊதிய அமைப்பு குழப்பமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்; தேவையை அடிப்படையாகக் கொண்ட குறைந்தபட்சக் கூலி வரம்பையும், அதேபோல அதிகபட்சக் கூலியையும் நிர்ணயித்தாக வேண்டும்; இதைக் காலவரம்பின்றித் தள்ளிப் போட்டுக்கொண்டே போகமுடியாது.

ஊதியக் கொள்கையின் அடிப்படை நோக்கங்களை மத்திய அரசு ஏற்கனவே விவரித்திருக்கிறது; இதைச் செயல்படுத்த வேண்டியது மாநில அரசுகளின் வேலையாகும்.

மாநில அரசுகள் பின்பற்றும் பலவேறுவித ஊதியக் கொள்கைகளால், மாநிலங்களுக்கிடையில் ஊதிய அமைப்புகளில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது, ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குத் தொழிற்சாலைகள் மாறுவதற்கும் காரணமாகி விடுகிறது.

ஊதியக் கொள்கைகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக ஒரு தனி நிர்வாக அமைப்பை ஏற்படுத்தலாம்."

---

## சுதந்தரப் போராட்ட வீரர்கட்குப் பணவுதவி

### மேற்கு வங்கத்தில் 5,300 பேர் மனு

கல்கத்தா, சூலை 12—

சுதந்தரப் போராட்டத் தியாகிகளுக்குப் பணவுதவி அளிப்பதென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறதல்லவா? இந்தப் பண உதவியைப் பெறுவதற்காக, மேற்கு வங்கத்தில் சுமார் 5,300 சுதந்தரப் போராட்டத் தியாகிகள் மனுச் செய்துள்ளனர்.

இத்தகவலை, மேற்கு வங்க நிதியமைச்சர் சங்கர் கோஷ், மாநிலச் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

"இவற்றில் 200 மனுக்களை ஏற்கனவே மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பிவைத்துள்ளது; பாக்கி மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றன" என்று அவர் சொன்னார்.

"மேற்கு வங்கத்தில் 1948-ம் ஆண்டு முதல் மொத்தம் 2,574 சுதந்தர வீரர்கள் உதவிப் பணம் பெற்று வருகின்றனர்; இதனால் மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 11 இலட்சம் செலவாகிறது" என்றும் அவர் சொன்னார்.

# தொழிலாளர்களுக்கான மலிவு விலை வீடுகள்

## தமிழக அரசின் தனிக் கவனம்

### புதுடில்லி மாநாட்டில் அமைச்சர் க. இராசாராம் விளக்கம்--மற்ற மாநிலங்களுக்கும் யோசனை

புதுடில்லி, ஜூலை 13—

"தமிழகத்தில் தொழிலாளர்கட்கு வீடு கட்டிக் கொடுப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது; எல்லா வசதிகளையும் கொண்ட 300 சதுர அடிப் பரப்பளவு உள்ள இவ்வீடுகளைக் கட்ட ரூ. 4000-த்திலிருந்து ரூ 5,000-வரை செலவாகிறது; இப்படிப்பட்ட வீடுகளைக் கட்ட செங்கற்களும் -- சுண்ணாம்புமே பயன்படுத்தப்படுகின்றன; சிமெண்டோ -- இரும்போ பயன்படுத்தப்படவில்லை; இப்படிப்பட்ட வீடுகளைக் கட்ட எல்லா மாநிலங்களும் முன்வரலாம்"

என்று தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் யோசனை தெரிவித்தார்.

நேற்று இங்கு நடைபெற்ற வீட்டு வசதித்துறை அமைச்சர்கள் மாநாட்டில், அசாம் மாநில அமைச்சர், சிமெண்டும்--இரும்பும் கிடைக்காததால், தமது மாநில வீடுகளுக்கும் திட்டங்கள் செயல்படாதிருப்பதாகக் கூறியதைத் தொடர்ந்து அமைச்சர் க. இராசாராம் அவர்கள் மேற்கண்ட யோசனையை வெளியிட்டார்.

## இந்திராவின் காலங்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையில் கையெழுத்திட்டிருப்பவர் -- தமிழ்நாடு இந்திரா காங்கிரசுப் பொருளாளர் தீர்த்தகிரிக் கவுண்டர் ஆவார்!

அதுமட்டுமல்ல -- இந்திரா காங்கிரசைச் சார்ந்தவர், இந்தக் கிளர்ச்சியில், தொடக்கத்திலிருந்தே கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இராதாகிருஷ்ணன் எம்.பி., இலட்சுமிபதி நாராயண ரெட்டியார் எம்.பி. ஆகிய இருவரும் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் -- கைதும் செய்யப்பட்டார்கள் என்றும் செய்தி வந்தது.

வன்முறைகள் நடப்பதற்கு முன்பே – அரசாங்கம் அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பே கிளர்ச்சியை ஆதரித்து அவர்கள் ஈடுபட்டார்கள்.

'கோவை விவசாயிகள் கோரிக்கை சரியில்லை' என்று உள்ளபடியே இந்திரா காங்கிரசின் தலைமைப் பீடம் கருதுமானால், அரசுக்கு எதிராக மறியல் செய்த—தலைமையின் கொள்கைக்கு எதிராகப்போய் மறியல் செய்து சிறை சென்ற இந்த எம்.பி.-க்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்திரா காங்கிரசுத் தலைமை தயாரா? அந்த எம்.பி.-க்கள் மன்னிப்பாவது கேட்பார்களா?

மக்களிடத்திலகூட அல்ல—காங்கிரசுத் தலைமையிடமாவது அவர்கள் மன்னிப்புக் கேட்பார்களா என்று அறிய விரும்புகிறேன்."

## மின்சார வெட்டு நீங்குகிறது

சென்னை, ஜூலை 13—

தமிழ்நாட்டில் கடந்த மாதம் 19-ந் தேதி நடைமுறைப் படுத்தப்பட்ட 25 சதவிகித மின்சார வெட்டு உடனடியாக ரத்து செய்யப்படுகிறது.

இதற்கான உத்திரவை தமிழக ஆளுனர் கே. கே. ஷா இன்று பிறப்பித்தார்.

"உயர் அழுத்த தொழிற்சாலை போன்றவைகளான) மின்விசைக்கு 25 சதவிகித மின்சார வெட்டு கடந்த மாதம் செயல்படுத்தப்பட்டது; தற்போது நீர்த் தேக்கங்களில் கணிசமான அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்து வருவதாலும், அண்டை மாநிலமான மைசூரிலிருந்து கூடுதலான மின்சார சக்தி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாலும் இந்த மின்சார வெட்டு ரத்து செய்யப்படுகிறது" என்று உத்தியோக வட்டாரங்களில அறிவிக்கப்பட்டது.

"மைசூரிலிருந்து நூறு மெகா வாட் மின்சாரம் பெறுவதற்கான முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

## வசை பாடுவதற்கு ஓர் அகராதி!

### ஐந்து மொழிகளில் தயாரிப்பாம்

இலண்டன், ஜூலை 13—

பிரிட்டனில் ஒரு புதிய புத்தகம் பெரும் அளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

ஐந்து மொழிகளில் வசை மொழிகளை அடுக்கித்தரும் புத்தகம் அது!

பிரெஞ்சு--ஜெர்மனி -- இத்தாலி -- ஸ்பானிஷ் மொழிகளில் திட்டுவதற்கு அப்புத்தகம் பெரிதும் பயன்படுகிறதாம்!

## அருப்புக்கோட்டையில் மாற்றுக் கட்சியினர் வெறியாட்டம்

### கழகக் கொள்கை விளக்கக் கூட்டத்தில் கல்லெறிந்து கலவரம் விளைவிக்க முயற்சி

கடந்த 2—7—72 அன்று மாலை அருப்புக்கோட்டை தியாகராய நகர் இடலில் விவசாயிகள் சங்கக் கோரிக்கை பற்றிய கழகக் கொள்கை விளக்கக் கூட்டம், வட்டப் பொருளாளர் திரு. ஆ. குருசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் உரைக்குப்பின், எம். ஜி. ஆர். மன்றச் செயலாளர் அ. பாலகிருட்டினன், முஸ்லீம் லீக் செயலாளர் எம். எஸ். அப்துல் கரீம், திராவிடர் கழகத் தலைவர் எஸ்.எஸ். கருப்பையா, நகர தி. மு. க. செயலாளர் பி. பி. என். நல்லதம்பி ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து திரு. க. பிச்சை பேசிக் கொண்டிருந்தபோது, மேடை நோக்கிச் சரமாரியாகக் கற்கள் வந்து விழுந்தன; சிறிது நேரத்தில் கும்பலாக வந்து, 'கூட்டத்தை நடத்தாதே -- மேடையில பேசாதே -- இனியும் கூட்டம் நடந்தால் விபரீதம் விளையும்' என்று கூச்சல் போட்டனர்.

உடன் வட்டக் காவல் துறை அதிகாரி உட்பட காவல் துறையினர் அவர்களைப் பிடிக்க முயன்றபோது, சிதறி ஓடிவிட்டனர்; பின்பு கூட்டப் பகுதியில் கற்கள் விழுந்தன; இதனால் கழகத் தோழர்கள் இருவருக்குக் காயம் ஏற்பட்டது; கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது; நகரச் செயலாளர் அமைதிப்படுத்தினர்; சற்று நேரத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் காரில் வந்தார்; அவரது கார் மீதும் கல்லெறிந்தனர்; உடனே விரைந்து சென்று இருவரைப் பிடித்துக் காவல் துறை வண்டியில் ஏற்றினர்.

தொடர்ந்து கூட்டம் நடந்தது; வட்டச் செயலாளர் மு. முத்து வடுகு மதுரை எஸ். காமராஜ் ஆகியோர் பேசினர்.

துணைச் செயலாளர் க. கந்தசாமி நன்றி கூறினர்.

மாவட்ட அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனார், மாவட்டக் கழக உறுப்பினர்கள் இரா. கிருட்டினன், சு. நடராசன், க. சிவராமன், அவைத் தலைவர் மு. க. இராமலிங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தனி அமைப்பின்பேரில் மேற்கு இராமநாபுரம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சு. ஆ. மு. முத்து முருகன் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் விழுந்த கற்களையும் -- காயமடைந்த கழகத் தோழர்கள் அ. பாலகிருட்டினன், இரா. செல்லையா ஆகியோரையும் காவல் துறையில் ஒப்படைத்து, கூட்டத்தில் கல்லெறிந்து குழப்பம் விளைவித்த பால் டிப்போ இராமசாமி, சென்ன கேசவன், செயவிலாஸ் டிரைவர் என். சீனிவாசன், கண்டக்டர் சுந்தரராசன், கண்ணன், என். சுந்தரராசன், ஆனந்தராஜ், பெருமாள்சாமி, இராமதாஸ், சீனிவாசன் ஆகியோர் மீது நகரச் செயலாளர் பி. பி. என். நல்லதம்பி புகார் மனுக் கொடுத்துள்ளனர்.

அருப்புக்கோட்டை அரசியல் வரலாற்றில் அண்மைக் காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் நடந்ததில்லை.

# 'கிளர்ச்சி முழுவதுமே அரசியல் நோக்கமுடையது'

## 'கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காகவே எதிர்க் கட்சிகள் பலவும் இதில் ஈடுபட்டன'

### 'சுமுகமான தீர்வுகாணத் துவக்க முதலே முதல்வர் முயற்சி செய்தார்-- வலது கம்யூனிஸ்டுக் கட்சிதான் தடங்கலாக இருந்துவந்திருக்கிறது'

### தலைமையமைச்சரிடம் அமைச்சர் க. இராசாராம் எடுத்துரைத்து விளக்கினர்

புதுடில்லி, ஜூலை 13—

தமிழ்நாட்டில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதற்காக நடத்தப்பட்டுவரும் விவசாயிகள் கிளர்ச்சியைத் தாங்கள் ஆதரிக்கவில்லை என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையெல்லாம் மின் கட்டணத்தை உயர்த்தியது அல்ல என்றும், விவசாயிகள் போராட்டத்தை மாநில அரசு கையாண்ட முறைதான் என்றும் தலைமையமைச்சர் கருத்தறிவித்திருக்கிறார்.

"தமிழ்நாட்டில் தமிழர் படை இருப்பது குறித்துத் தெரியுமா?" என்று செய்தியாளர் ஒருவர் தலைமையமைச்சரிடம் கேட்ட போது, 'எனக்கு அது குறித்து எதுவுமே தெரியாது' என்றார்; 'எப்படிப்பட்ட படையாக இருந்தாலும், அதுபற்றிக் கவனிக்க வேண்டியது தமிழக அரசின் கடமையாகும்' என்றார்.

இதற்குப் பிறகு தமிழக பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தலைமையமைச்சரைச் சந்தித்து, தமிழகத்தின் நிலைமையை விளக்கிக் கூறினர்.

'நடைபெறும் கிளர்ச்சி முழுவதுமே அரசியல் நோக்குடையது" என்பதை அமைச்சர் இராசாராம் எடுத்துரைத்தார்.

'துவக்கத்தில் இந்தக் கிளர்ச்சியில் கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும், பிறகு, கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன், எதிர்க் கட்சிகள் எல்லாம் இதில் ஈடுபட்டன என்பதையும் திரு. இராசாராம் அவர்கள் தெளிவுபடுத்தினர்.

தமிழக முதலமைச்சர் இப்பிரச்சினையில் சுமுகமான ஒரு முடிவு ஏற்படத் துவக்கம் முதலே ஆவலாக இருந்துவந்தார் என்றும் ஆனால் விவசாயிகளின் பிரதிநிதிகளை சுமுகமான முடிவுக்கு வரவிடாமல் வலது கம்யூனிஸ்டுக் கட்சி தடங்கலாக இருந்து வந்திருக்கிறது என்றும் அவர் தலைமையமைச்சரிடம் விளக்கிக் கூறினர்.

விவசாயிகள் கிளர்ச்சிபற்றி செய்தியாளர் கூட்டத்தில் தலைமையமைச்சர் வெளியிட்ட கருத்துபற்றி நிருபர்களைச் சந்தித்த திரு. இராசாராம் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகையில், தலைமையமைச்சர் தம்மிடம் விவசாயிகள் பிரச்சினையை மாநில அரசு சமாளித்த விதம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றார்.

மின் கட்டண உயர்வு குறித்துத் தாம் தலைமையமைச்சரின் கருத்தைக் கேட்டதற்கு, 'கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை' என்று தலைமையமைச்சர் தெரிவித்ததாக அமைச்சர் இராசாராம செய்தியாளர்களிடம் கூறினர்.

விவசாயப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி சுமுகமான தீர்வு காண முதலமைச்சர் எப்போதுமே தயாராக இருந்ததாகவும், இப்போதுகூட அவர்களுடன் சந்தித்துப் பேச முதலமைச்சர் முன்வந்திருக்கிறார் என்றும் திரு. இராசாராம் தெரிவித்தார்.

'துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடாது' என்று போலீசாருக்குத் திட்டவட்டமான உத்தரவு இடப்பட்டிருந்ததாகவும் ஆயினும் சில இடங்களில் வன்முறைக் கூட்டம் ஸ்டேட் பாங்கி போன்ற கட்டடங்களையும், போலீசாரையும் தாக்கியதால் வேறு வழியின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாகவும் திரு. இராசாராம், தலைமையமைச்சரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

'தமிழர் படை' என்பது மதுரையில் மட்டுமே இருந்துவருவதாகும்! நடைபெற்ற கிளர்ச்சியில் மதுரையில் எந்தவித அசம்பாவிதமும் நடக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்; மேலும், தமிழர் படை, ஆர்.எஸ்.எஸ். போன்ற 'இராணுவ பாணி'யில் அமைக்கப்பட்டது ஒன்றும் அல்ல என்பதை திரு. இராசாராம் தலைமையமைச்சரிடம் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டம்

### 14--7--72

மாயூரம்

அறிஞர் அண்ணா படிப்பகம்-- மாணவர் சாரங்கபாணி மன்றம் ஆகியவை சார்பில் நாவலர் பிறந்த நாள் விழா; மாலை 7 மணிக்கு கூறைநாடு கீழ ஒத்தச் சரகில்; தலைவர்: என்.எம். முகமது சுகூது; வாழ்த்துரை: அமைச்சர் மன்னை நாராயணசாமி, அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி., திருவாரூர் கே. தங்கராசு, என். கிட்டப்பா எம்.எல்.ஏ., புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி, இரா. ஜோசப், அ. செங்குட்டுவன், கே. நாராயணசாமி. (நாவலர் அவர்களும் கலந்துகொண்டு நன்றியுரையாற்றுவார்.)

போக்குவரத்துத் துறை அமைச்சர்

### ச. இராமச்சந்திரன்

#### நிகழ்ச்சிகள்

ஜூலை 14: மயூரம்—திரு. கிட்டப்பா எம்.எல்.ஏ. இல்லத் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; மாலை 4-மணி: சிதம்பரம்—குள்ளஞ்சாவடி உயர்நிலைப் பள்ளி துவக்க விழாவில் கலந்துகொள்ளல்; 4 30 மணி: கோதண்டராமபுரம் சீரணிப் பள்ளித் துவக்க விழா; 6-மணி; நெய்வேலி—உதவிப் பொறியாளர் சங்கத துவக்க விழாவில் கலந்துகொள்ளல்.

ஜூலை 15 மாலை 5 மணி: நாமக்கல்—'வன்முறை கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

### சத்தியவாணிமுத்து

#### நிகழ்ச்சிகள்

ஜூலை 14 காலை 9-மணி: காட்டுமன்னார்கோவில்—திருமண நிகழ்ச்சியில கலந்துகொள்ளல்.

ஜூன் 15 காலை 10 மணி: தஞ்சாவூர் கீழப்புரவாசல் ஆசிரியர்கள் விடுதி திறந்துவைத்தல்; மாலை 7-மணி: வன்முறை கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அமுதம் அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]